மக்கள் விடுதலை முன்னயிணின் உத்தியோகபூர்வ செய்தித்தாள் செய்தி பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டது

# செஞ்சக்தி

2014 ஜூலை அணி 09 மடல் 12
விலை ரூபா 20.00

LIBRARIAN'S OFFICE RECEIVED 18 JUL 2014 LIBRARY UNIVERSITY OF JAFFNA

UNIVERSITY OF JAFFNA LIBRARY 28 JUL 2014 PERIODICALS




## ஜே.வி.பிக்கு எதிரான அரச
# ஊடக நடவடிக்கை ஆரம்பம்!

**தேசிய மற்றும் சர்வதேச ரீதியாக பாரிய நெருக்கடிக்கு உள்ளாகியிருக்கின்ற ராஜபக்ஷ ஆட்சியானது அதற்கு புறம்பாக கூட்டணியில் உட்கட்சி நெருக்கடியையும் சந்தித்ததிலிருந்து மீள முடியாது தவிக்கிறது. விசேடமாக கடந்த தென் மற்றும் மேல் மாகாண சபைத் தேர்தலில் ஏற்பட்ட பின்னடைவு, அண்மையில் ஏற்பட்ட மாணவர் போராட்டம், அரச ஊழியர்களின் ஓய்வூதி பணிக்கொடை துண்டிப்பிற்கு எதிரான போராட்டங்களின் போது அரசாங்கம் தோல்வி கண்டதன் காரணமாக அரசாங்கத்தின் இருப்பு சவாலுக்கு உள்ளாகியிருக்கிறது. இதேவேளையில் ஊவா மாகாண சபைத் தேர்தல் அரசாங்கத்திற்கு பாரிய வீழ்ச்சியை ஏற்படுத்தப் போவது இப்போது எதிர்வு கூறப்பட்டு வருகிறது.**

அரசாங்கம் பாரிய பின்னடைவை எதிர்கொண்டிருந்தபோதிலும் அண்மைய காலங்களில் ஜே.வி.பி வெற்றியை நோக்கி நகர்வதன் காரணமாகவும், மக்கள் நம்பிக்கை அதிகரித்து அதைச்சூழ மக்கள் சக்திகள் திரள ஆரம்பித்திருப்பதினாலும் அரசாங்கம் கலக்கத்திற்கு உள்ளாகியுள்ளது.

அரசாங்கத்திற்கு சவாலக மாறிய ஜே.வி.பியின் வளர்ச்சியைக் கண்டு ஆட்டங்கண்டுள்ள அரசாங்கம் ஜே.வி.பிக்கு எதிராக அவதூறுகளை அள்ளிவீசும் ஊடக நடவடிக்கையை ஆரம்பித்திருக்கிறது. சில காலமாக ஊடகங்களுடன் தொடர்பு பட்டிருந்த இப்போது அரசாங்கத்தின் அமைச்சுப் பதவிகளை வகிக்கும் சில அமைச்சர்களும், அரச ஊடகங்களுடன் தொடர்புடைய சில ஊடகவியலாளர்களும் இந்த நடவடிக்கையில் தொடர்புள்ளதாக தெரிய வருகிறது.

ஜே.வி.பியின் தலைமைத்துவத்திற்கு சேறு பூசுவதற்காக தகவல்களை தேடல், அவதுாறுகளை நிர்மாணித்தல் மக்கள் மத்தியில் ஜே.வி.பி பற்றிய சந்தேகத்திற்கிடமான செய்திகளை வெளியிடுதல் இந்த ஊடக நடவடிக்கையின் பணியாகவுள்ளது.

அண்மையில் லேக்ஹவுஸ் வெளியிடும் 'சிலுமின' பத்திரிகை ஜே.வி.பி தலைவர் தோழர் அனுர திசாநாயக்கா பற்றிய பொய்யான செய்தி -இதன் ஒரு சந்தர்ப்பமாகும். அதற்கு புறம்பாக ரூபாவாஹினி செய்திகளிலும், கண்டி மாவட்டத்தில் ஜே.வி.பி அங்கத்தினர்கள் அரசாங்கத்துடன் இணைந்ததாக செய்தி வெளியிட்டமை அதன் இன்னுமொரு சந்தர்ப்பமாகும். அச்செய்தியில் ஜே.வி.பி அங்கத்தவர்களென காட்டப்பட்டவர்கள் ஜே.வி.பி உறுப்பனர்கள் சிலர் 2008ம் ஆண்டு கட்சியிலிருந்து வெளியேறியவர்களாகும். அவர்கள் சிலர் ஜே.வி.பியிலிருந்து விலகி அரசாங்கத்துடன் இணைந்துள்ளார்கள் என்று செய்தியில் காட்டப்பட்டுள்ளது. அச்செய்தியை அடிக்கடி காட்டுவதன் மூலம் அரசாங்கத்தின் வங்குரோத்துத் தனம் தெளிவாகிறது.

அதேபோன்று அண்மையில் ஊவா மாகாணத்தின் முன்னாள் உறுப்பினர் பூமிநாதன் ஐ.தே.க.வில் இணைந்துக் கொண்ட செய்தியும் அவ்வாறான ஒன்றாகும். பூமிநாதன் 2011ல் முன்னிலை சோசலிச கட்சியில் இணைந்தவராகும். அதனால் கட்சியிலிருந்து நீக்கப்பட்டவராவார். அதன் பின்னர் அவர் தொண்டமானின் இதொக வில் இணைந்து இப்போது ஐ.தே.கவில் இணைந்துள்ளார் இவை-களை மூடி மறைப்பதற்காக அரசாங்கம் இவ்வாறான நாடகத்தை அரங்கேற்றியுள்ளது.

இதேவேளை அண்மையில் ஜனாதிபதி பதுளை கூட்டமொன்றில் கலந்துக் கொண்டபோது டலஸ் அலகப்பெரும பதுளை பொது நூலகத்தில் நடத்திய கூட்டத்தில் கூறியதாவது இதற்கு முன்னர் இளைஞர்களை ஏமாற்றி இரத்தம் சிந்திய கட்சி அண்மையில் ஏற்பட்ட இனவாத கலவரங்களுக்கு பின்னால் இருப்பதாகவும், குறிப்பிட்டுள்ளர்.

இவ்வாறான அரசாங்கத்தின் நடவடிக்கைகள் காட்டுவது அரசாங்கத்தின் வங்குரோத்து தனத்தையாகும். அரசாங்கம் ஜே.வி.பிக்கு எதிராக நாட்டியிருக்கு பொறியின் அளவு இதுவாகும். அவதூறு, சேறுபூசுதல் மூலமாக ஜே.வி.பியின் வெற்றிப் பயணத்தை தடுத்து நிறுத்த முடியாதென ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் தோழர் ரில்வின் சில்வா செஞ்சக்திக்கு குறிப்பிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மட்டக்களப்பில் ஜே.வி.பி.காரியாளயம் திறப்பு!



கடந்த 25ம் திகதி மட்டக்களப்பு மாவட்ட மக்கள் விடுதலை முன்னணி அங்கத்தவர்களுக்கு ஓர் விசேடநாளாகியது. அதாவது மட்டக்களப்பு மாவட்டத்தில் எமது கட்சியின் காரியாளயமொன்று திறந்து வைக்கப்பட்டது. மக்கள் விடுதலை முன்னணியின் பிரதான செயலாளர் இதனை திறந்த வைத்ததோடு அச்சந்தர்பத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் கட்சி அங்கத்தவர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

கடந்த யுத்தகாலகட்டத்தில் இருந்து எமது கட்சியின் அரசியல் நடவடிக்கைகளில் இம் மாவட்டத்தில் நாம் ஈடுபட்டு வந்தாளும் ஒரு காரியாளயத்தின் குறைபாடு நிலவி வந்தது. இனவாத வன்முறைகள் ஆங்காங்காங்கே நடந்து வரும் இச்சந்தர்ப்பத்தில் இந்நாட்டில் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களை ஒன்றுசேர்த்து தேசிய ஒற்றுமையை கட்டியெழுப்பும் பயணத்தை தொடர்வதற்கும், இப்பகுதி மக்களுக்கு எம்முடன் தொடர்பு கொள்வதற்கும் இது ஓர் அறிய சந்தர்ப்பமாகும்.

## சுகாதாரத் துறையின் நெருக்கடிகளுக்கு அரசு பொறுப்பு கூறவேண்டும்

**தோழர் காமினி குமாரசிங்க அகில இலங்கை தாதிகள் சங்கத்தின் செயலாளர்**



சுகாதாரத் துறையில் ஒவ்வொரு துறையினருக்கிடையில் மேலோங்கிவரும் முரண்பாடுகளின் பொறுப்பை அரசு ஏற்றுகொள்ள வேண்டும் எனவும் தொழில் சங்கங்களுக்கு இடையில் மோதவிட்டு அவற்றை அரசாங்கத்துக்கு பொருத்தமான வகையில் பயன்படுத்துவதாகவும் அகில இலங்கை தாதிகள் சங்கத்தின் செயலாளர் தோழர் காமினி குமாரசிங்க அரசாங்கத்தை குற்றம் சுமத்துகிறார்.

இத்தருணத்தில் சுகாதாரத்துறையில் பணியாற்றும் பல்வேறு துறையினர் அவரவர்கள் தாக்கிகொள்ளும் அளவுக்கு நிலமை கூர்மையடைந்துள்ளது. இதனால் சுகாதாரத் துறையில் உள்ளவர்கள் மத்தியில் நிலவ வேண்டிய நல்லிணக்கம் சிதைந்துள்ளது. அனைவரும் ஒன்றிணைந்து ஓர் குழுவாக நோயாளியை பராமறிக்க வேண்டியிருந்தாளும் இவ்வாறான சம்பவங்களினால் இதற்கு பங்கம் ஏற்பட்டுள்ளதால் அரசாங்கம் இந்த சூழ்நிலையில் குளிர் காய்வதை நிறுத்திவிட்டு மக்களுக்கு சிறந்த சுகாதாரச் சேவையை வழங்குவதற்கும், பணியாற்றுவோருக்கு நியாயத்தையும் வழங்கி இப்பிரச்சினையை தீர்த்துவிடும் படி தோழர் காமினி குமாரசிங்க வலியுறுத்துகிறார்.

## தேசிய மாணவர் வீர தின ஞாபகார்த்தம்



கடந்த ஜுன் 20ம் திகதி சோஷலிச மாணவர் சங்கத்தினால் தேசிய மாணவர் வீர தினத்தை கொழும்பு தேசிய பொதுநூலக கேட்போர் கூடத்தில் மிகவும் வெற்றிகரமாக நடாத்தப்பட்டது. அதன் பிரதான சொற்பொழிவை மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் தோழர் அநுர திசானாக்காவால் நடாத்தப்பட்டது.

முதலாளித்துவ ஆட்சியாளர்கள் எம்மிடமிருந்து பரித்துகொண்ட பரிபூரணமான மாணவ வீரர்களின் வெற்றிடங்களை புதிய பரம்பறையினால் நிரப்ப வேண்டும் என தோழர் அநுர திசானாயக்கா வலியுறுத்தினார். மாணவர்கள் தமது அறிவை பரவலாக்கிக் கொள்ள வேண்டும். மிகத் தொலைவிலுள்ள கிராமப்புறங்களில் வாழும் மக்களின் வாசனையை சேர்த்து கொள்ள வேண்டும், நகரப்புரங்களில் முடுக்குகளில் வாழும் மக்களின் வாழ்க்கையை மிக நெருக்கமாக ஆராய வேண்டும். சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களின் தனித்துவங்களை, கலாச்சார பண்பாடுகளை விளங்கிக் கொள்ள வேண்டும். இவை அனைத்தையும் விளங்கிக் கொண்ட மக்கள் எமக்கு தேவைப்படுகின்றனர். அவ்வாறானதொரு மக்கள் பிரிவினரே எமது நாட்டின் தலைமைத்துவத்தை ஏற்றுகொள்ள வேண்டும். இவ்வாறான தலமைத்துவத்தை நிர்மாணிக்கும் போது எமது நாட்டின் மாணவர் இயக்கத்துக்கு பாரிய பொறுப்புள்ளது. எனவே அப்பொறுப்பை உரிய முறையில் விளங்கிக்கொண்டு, கற்றுகொண்டு வெற்றிகரமாக முன்னோக்கி செல்வதற்கு ஆசி வளங்கவதாகவும் கூறினார்.

# மக்கள் சக்தியை வெல்லவைப்பதற்கு ஊவா மக்கள் தயார்.

அரசாங்கத்தால் இன்னுமோர் தேர்தலை வரவழைக்கப்பட்டுள்ளது. அது ஊவா மாகாண சபை தேர்தலாகும். எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலை இலக்கு வைத்து அரசு மேல்மாகாண மற்றும் தென்மாகாண சபை தேர்தலை நடாத்தினாலும் அவர்கள் எதிர்பார்த்த வாக்குகளை அரசாங்கத்துக்கு பெற்று கொள்ள முடியவில்லை. ஐக்கிய தேசிய கட்சியும் அதே நிலைக்கு முகம் கொடுத்தனர். ஆனால் மக்கள் விடுதலை முன்னணியின் நிலை இதை விட மாறுபட்டது. கடந்த தேர்தல்களில் பின்னடைந்த மக்கள் விடுதலை முன்னணிக்கு வாக்குகள் அதிகமாக கிடைத்ததோடு பொதுமக்கள் மத்தியில் மக்கள் விடுதலை முன்னணி தொடர்பான நம்பிக்கை மீண்டும் வளரத் தொடங்கியது. இவ்வாறான சூழலில் அரசாங்கத்தின் பிரதான எதிரி இப்போ ஐக்கிய தேசிய கட்சியை விட மக்கள் விடுதலை முன்னணியாக விளங்குவதால் எதிர்வரும் ஊவா மாகாண தேர்தலில் மக்கள் விடுதலை முன்னணிக்கு கிடைக்கும் வாக்குகளை குறைப்பதற்கு செயல்படுவது அரசாங்கத்தின் பிரதான குறிக்கோளாக உள்ளது. எனவே இப்போதே அரசாங்கம் எமது கட்சிக்கு எதிராக பல்வேறு அவதூறுகள், பொய் பிரச்சாரங்களில் ஈடுபடுவதற்கு முயற்சித்து வருகின்றது.

இவ்வாறான சூழலில் மக்கள் விடுதலை முன்னணி தமது செயற்பாடுகளை பலப்படுத்தி தேர்தல் நடவடிக்கைகளில் மிகவும் சக்திவாய்ந்ததாக ஈடுபட்டு வருகின்றது. அதன் ஒரு கட்டமாக கடந்த 20ம் திகதி வெல்லவாய நகரத்தில் மொனராகல மாவட்டத்தின் நிறைவேற்று சபையை மிகவும் வெற்றிகரமாக இயற்றியது. இதில் பிரதான உரையை கட்சியின் பிரதான செயலாளர் ரில்வின் சில்வா ஆற்றினார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செஞ்சக்தி

மக்கள் விடுதலை முன்னணியின் உத்தியோகபூர்வ செய்தித்தாள்



464/20 பன்னிபிட்டடிவீதி பெலவத்த,பத்தரமுல்ல,இலங்கை
011-2785545, 0112785612
E-mail sensackthynews@gmail.com


# ஆளும் வர்க்கத்தின் ஆயுதமான இனவாதம்

மக்கள், சதாகாலமும் அரசியல்வாதிகளாலும் சுயமாகவும் ஏமாற்றத்துக்கு இறையாகி வருகின்றனர். வாக்குறுதிகளின் பின்னால் இருக்கும் அறிக்கைகள் வரையில் அவர்கள் அவ்வாறு ஏமாற்றப்படுவர்" அண்மையில் ஏற்பட்ட இனவாத மற்றும் மதவாத அடிப்படைவாத கலவரங்களை பற்றியும் அதற்காக சகல அடிப்படைவாத இனவாத கும்பல்கள் விடும் அறிக்கைகளை பார்க்கின்றபோது லெனினின் மேற்கூறிய கருத்து மிகவும் பொருத்தமுடையதாக அமைகிறது. சகல இனவாத மதவாத அடிப்படைவாத கும்பல் எதை கூறினாலும் இறுதியில் அவர்களால் பாதுகாக்கப்படுவது, தமது இனமோ மதமோ அல்ல, முதலாளித்துவ முறையும் முதலாளித்துவ அரசையும் ஆகும். முஸ்லிம் இனவாதத்தை தூண்டுகின்ற அமைச்சர் ஹக்கீமும் தமிழ் இனவாதத்தை தூண்டுகின்ற தொண்டமான், டக்ளஸ் தேவானந்தா போன்ற அமைச்சர்களும், சிங்கள இனவாதத்தை தூண்டுகின்ற சம்பிக்க மற்றும் வீரவன்ச போன்றவர்களும் ராஜபக்ஷக்களின் அரசாங்கத்தில் ஒரே அமைச்சரவையில் இருந்துக் கொண்டு மக்களை வதைக்கின்ற அரசாங்கத்தையும் முதலாளித்துவ முறையையும் பாதுகாத்து வருகின்றனர்.

இனவாதமும் மதஅடிப்படைவாதத்திற்கும் தீ மூட்டுவோர் அதற்காக பல குழுக்களை அமைப்பார்கள் அவ்வாறு செய்வதேன்? முதலாவதாக அதிகாரம் மற்றும் சலுகைகளுக்காகும். தோட்டங்களில் வாழும் மக்களை ஒடுக்கும் முதலாளித்துவ முறையை தமிழ் இனவாதத்தை பயன்படுத்தி வாக்குகளை பெறும் தொண்டமான் அதை அதிக விலைக்கு முதலாளித்துவ அரசாங்கத்திற்கு விற்று அமைச்சுப் பதவிகளையும் சலுகைகளையும் பெற்றுக் கொள்கிறார். அதேபோன்று அம் மக்களை ஒடுக்குவதற்கும் , ஏமாற்றுவதற்கும் துணைபோகின்றனர். சிங்கள பௌத்த வெறியைத் தூண்டி வாக்குகளை பெறுகின்ற ஹெல உறுமயவும் அதை முலாளித்துவ அரசாங்கத்திற்கு தாரைவார்த்து அமைச்சுப் பதவிகளையும் சலுகைகளையும் பெறுகிறது. அதன் பின்னர் தமிழ், முஸ்லிம் இனவாதிகளோடு ஒன்றாக ஒரே அமைச்சரவையில் ஒன்றாக கும்மாளமிட்டு முதலாளித்துவ அரசை பாதுகாக்கிறது. ஹக்கீமை போன்றே ஏனைய அமைச்சர்களும் ராஜபக்ஷவும் அதையே செய்து வருகின்றனர். வேதனைக்குரிய விடயம் இனவாதத்திலும் மதவாதத்திலும் வெறிகொண்டு முரண்படுகின்ற மக்கள் இதை புரிந்து கொள்ளாதுள்ளமையாகும்.

ஆளும் வர்க்கம் அதிகாரத்தை கைப்பற்றுவதற்கு மட்டுமல்ல அதிகாரத்தை கொண்டு செல்வதற்காகவும் இனவாதத்தை பயன்படுத்துகிறது. மக்களின் எரியும் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாத அரசாங்கம், நெருக்கடிகளுக்கு உள்ளாகும்போது, மக்கள் தமது உரிமைகளுக்காக போராட்டப் பாதையை தெரிவு செய்து, அரச எதிர்ப்பு உக்கிரமடையும்போது அதனை எதிர்கொள்ள ஆட்சியாளர்களுக்கு இருக்கின்ற இலகுவான ஆயுதம் இனவாதமும் மதவாதமுமாகும். இதன் மூலம் தமது உரிமைகளுக்காக அரசாங்கத்திற்கு எதிராக போராடுவதற்குப் பதிலாக மக்கள் தமக்கிடையே முரண்பட்டுக் கொள்வதினால் அரச எதிர்ப்பு போராட்டம் நலிவடைகிறது. அது அரசுக்கு கிடைக்கும் வெற்றியாகும். மறுபுறத்தில் நாட்டில் முதல்ாளித்துவ அரசுக்கு எதிராக நிலவும் மக்களின் பிரச்சினைகள் திசை திருப்பி இனவாதம் மேலெழுகிறது. அது அரசுக்கு நன்மையாகும். அதேபோன்று அரசாங்கம் தமது இருப்பிற்காக எதிர்கட்சிகளை, குறிப்பாக அரசாங்கத்திற்கு வர்க்க ரீதியாக சவால்விடுக்கின்ற சக்திகளை முடக்குவதற்கான வாய்ப்பாகவும் அது அமைகிறது. இனவாதம் மற்றும் மத அடிப்படைவாதத்தில் தோன்றும் பாதகமான விடயம் அதுவாகும். ஜே.ஆரின் ஆட்சியில் 83இல் ஏற்படுத்தப்பட்ட இனக்கலவரமானது ஜே.வி.பி.யை தடைச் செய்வதற்கு எடுத்தமையாகும்.

ஒடுக்கப்பட்ட வர்க்கத்தை பிரித்து துண்டாடி நலிவடையச் செய்வதற்காக முதலாளித்துவ வர்க்கத்திடம் இருக்கும் திடமான ஆயுதம் இனவாதம் மற்றும் மத அடிப்படைவாதமாகும். முதலாளித்துவ இனவாத கும்பல் அரசாங்கத்தில் ஒற்றுமையாக் இருக்குபோது மக்களிடையே இனவாதத்தை தூண்டி ஒற்றுமையை சிதைக்கின்றனர். அதனால் இனவாதம் எவ்வழியில் வந்தாலும் அது மக்களின் எதிரியாக இருப்பதுடன் அது ஆளும் வர்க்கத்தின் நண்பனாகும். வார்த்தைகளால் பொய்யாக இனவாதத்திற்கு எதிராக பேசும், அறிக்கைவிடும் ஆட்சியாளர்கள் நடைமுறையில் இனவாத மதவாத கும்பலை உருவாக்கி அனுசரனையளித்து கொண்டுச் செல்வதை காணலாம். அதனால் முதலாளித்துவ ஒடுக்குமுறைக்குள்ளான சகல மக்களின் பொறுப்பு, இன மற்றும் மத அடிப்படைவாதத்திற்கு இடமளிக்காது வர்க்க ஒற்றுமைக்காகவும் தேசிய ஒற்றுமைக்காகவும் போராடுவதாகும்.

# சாதாரண மக்களின் தேவை என்ன?



இலங்கையின் தேசியப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு 13ம் திருத்தம் ஒருபோதும் பயன்படாது என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுர திசாநாயக்க தெரிவித்தார். தற்போது லண்டனுக்கு விஜயத்தை மேற்கொண்டு தோழர் அனுர அங்கிருந்து ஊடகங்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது 13வது திருத்தத்தை அமுல்படுத்தும்படி இந்திய அரசு இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுப்பது அவர்களின் பொருளாதார நன்மை கருதியே தவிர தமிழ் மக்களின் நன்மைக்காக அல்ல.

மேலும் கருத்து தெரிவித்த தோழர் அனுர திசானாயக்க,

"இந்திய அரசு எமது நாட்டு பொருளாதாரத்தின் பெரும் பங்கினை விழுங்கியுள்ளது. எந்தவொரு நாடும் இன்னொரு நாட்டின் பொருளாதாரத்தை விழுங்கியதன் பின்னர் அந்த நாடு தாம் விழுங்கிய பங்கினை பாதுகாக்கவும் மேலும் விழுங்கிக் கொள்வதற்கும முயற்சி செய்து வருவார்கள் அதன் காரணமாக இந்தியா எமது நாட்டு அரசியலில் தலையிட்டனர். யுத்தத்தின் போது யுத்தத்திற்கு ஆதரவளித்து அரசியலில் தலையிட்டனர்"

அதிகாரப் பகிர்வின் ஊடாக அரசியல் தலையீடு செய்து வருகின்றனர். அதனால் 13வது திருத்தம் இந்தியாவின் தேவையே தவிர சாதாரண தமிழ் மக்களின் தேவையல்ல. செய்ய வேண்டியது தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்ப்பதாகும். தமிழ் இனவாத தலைவர்கள் தமது அதிகாரத்தை தக்கவைத்துக் கொள்வதற்காக அதிகாரப் பகிர்வெனும் போலிக் கருத்தியலை பரப்பினர். மேற்குலக நாடுகளும் இந்தியாவும் இன்று அதை போஷித்து வருகின்றனர். தேசியப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அதிகாரப் பகிர்வு ஒரு போதும் பிரயோசனமாக அமையுமேன நாம் நம்பவில்லை"

"மோடியின் வெற்றி பற்றி இலங்கையில் பலர் பலவிதமாக எதிர்வு கூறிவருகின்றனர். விஷேடமாக ஜெயலலிதாவின் அதரவின்றி அவருக்கு ஆட்சி அமைக்க முடிந்தது, இலங்கைக்கு கிடைத்த பெரும் வெற்றியென எதிர்வு கூறப்படுகிறது. ஆனால் அது அப்படியல்ல என்பது எமக்கு நன்றாகத் தெரியும்.

"இந்திய வெளிநாட்டுக் கொள்கையை நிர்ணயிப்பது இந்திய அரசியல்வாதிகள் அல்ல. அதற்காக பயிற்றுவிக்கப்பட்ட அதிகாரிகள் அடங்கிய குழாம் ஒன்றிருக்கிறது. இந்திய வெளிநாட்டுக் கொள்கை இந்திய அரசியல் கட்சிகள் மாற்றமடைவதால் மாறப்போவதில்லை. பாரதீய ஜனதா கட்சிக்கு தமிழ்நாட்டில் ஒரு உறுப்பினர் பதவியே கிடைத்திருக்கிறது. ஜெயலலிதா 39 இல் 37 ஆசனங்களை வென்றுள்ளார். அதனால் முன்னரைவிட ஜெயலலிதாவுக்கு மோடி செவிமடுத்தாக வேண்டும்.

"அப்படியில்லாவிட்டால் அவர் ஜெயலலிதாவை கைவிட்டு அரசியல் செய்தாக வேண்டும். அவர் அவ்வாறு செயற்பட மாட்டார். எமது நம்பிக்கையின் படி 13வது திருத்தமோ 13வது திருத்ததிற்கு அப்பால் செல்லும் அதிகாரப்பகிர்வோ எமது நாட்டு தேசியப் பிரச்சினைக்கு தீர்வாக அமையப் போவதில்லை. அது தேசியப் பிரச்சினையை மேலும் உக்கிரமடையச் செய்யுமே தவிர, சமனடையச் செய்யப் போவதில்லை.

விஷேடமாக வட மாகாண சபையை எடுத்துக் கொண்டால் அதன் மூலமாக தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வினை பெற்றுக் கொடுக்கப் போவதில்லை. அவர்களின் பொருளாதாரம், அவர்களின் சந்தை வாய்ப்பு, அவர்களின் கலாசாரம் தங்கிநிற்பது மத்தியத்துவப்படுத்தப்பட்ட ஆட்சிக்குல் வாழ்வதன் மூலம் மட்டுமே. தமிழ் மக்களில் இன்றும் பெரும்பான்மையாக வட கிழக்கிற்கு வெளியிலேயே வாழ்ந்து வருகின்றனர்."

"13வது திருத்தத்தின் மூலமாக நடைபெறப்போவதெல்லாம் பலவீனமான வடக்கு மாகாணசபை கட்டியெழுப்பப்பட்டு அம் மாகாணசபைக்கு நிச்சயமாக இந்தியாவிடம் சரணடைய வேண்டிய நிலைமையே தோன்றும். இவை அனைத்தும் இந்தியாவின் வழிநடத்துதலிலே நடைபெறுகிறது. இந்திய அரசுக்கு தேவைப்படுவதெல்லாம் அவர்களுக்கு தேவையானவாறு எமது நாட்டு அரசியலை வழிநடத்துவதாகும்"

எமது நாட்டு சந்தையில் பெரும்பங்கினை தற்போது இந்தியா விழுங்கியுள்ளது. எரிபொருள் துறையில் 2/3 பங்கினை அவர்கள் கைப்பற்றியுள்ளனர். கட்டிடத் துறையில், மருந்து வர்த்தக சந்தையிலும், வாகன வர்த்தக சந்தையிலும், பெரும் பங்கினை கைபற்றியுள்ளனர். மின்சாரத் துறையை கைபற்றுவதற்கு அவர்கள் தற்போது சம்பூர் அனல் மின்நிலைய ஒப்பந்தத்தை கைசாத்திட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாம் தடவையாக பதவியில் இருப்பதற்கு ஜனாதிபதிக்கு உரிமையில்லை

**மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் தோழர் அநுர திசாநாயக்க**



ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ 18வது யாப்பு சீர் திருத்தத்தை பாராளுமன்றத்தில் அமுல்படுத்தி கொண்டது மக்கள் ஆனையால் பெற்றுகொண்ட 2/3பெரும்பான்மையால் அல்ல என்பதால் மீண்டும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவது மறியாதைக்குறிய செயல் அல்ல என்று மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் தோழர் அநுர திசாநாயக்கா தெரிவிக்கிறார். அரசியல் யாப்பிற்கு அமைய 4வருடங்கள் நிறைவடைந்ததன் பின் இரண்டாவது பதவிகாலத்திற்கு மட்டுமே தேர்தலை பிரகடனப்படுத்த முடியும் என்பதால் ஜனாதிபதிக்கு எதிர்வரும் ஜனவரியில் ஜனாதிபதி தேர்தலை பிரகடனப்படுத்தவும் முடியாது என தெரிவிக்கிறார்.

கடந்த 09ம் திகதி கண்டி தபால் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற எமது நோக்கு கொள்கை திட்டம் குறித்த சொற்பொழிவு ஆற்றும் சந்தர்ப்பத்திலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அதன்போது மேலும் கருத்து வெளியிடுகையில், அரசியலை மக்கள் சேவையாக மாற்றியமைக்க வேண்டும். எவ்வகையான திட்டங்கள் இருந்தாலும் அவற்றை நடைமுறை படுத்துவதற்கு சிறந்ததோர் அரசியல் கலாச்சாரம் இருத்தல் அவசியமாகும். இந்நாட்டில் அரசியலை ஓர் தொண்டர் சேவையாக ஏற்றுக்கொண்டு அதனை சிறந்த முறையில் நடைமுறை படுத்தும் ஒரே கட்சி மக்கள் விடுதலை முன்னணி மட்டுமேயாகும். எனவே நாம் மிகவும் உறுதியுடன் கூறுகிறோம், இந்நாட்டை கட்டியெழுப்பும் திறமை மக்கள் விடுதலை முன்னணிக்கும் மட்டுமே உள்ளது. எனவே இன்று இந்த அரசியல் சாக்கடையை தூய்மை படுத்தி எடுக்க வேண்டியுள்ளது. எமது நாட்டு அரசியலை போதை பொருள் முதலாளிமார்களிடமிருந்து, பாதாள உலக கோஷ்டியினரிடமிருந்து, காடையர்களிடமிருந்து மீட்டெடுக்க வேண்டும். இந்நாட்டில் மக்கள் சார்பான ஆட்சியை நிலைநாட்ட வேண்டும். அதற்காகத் தான் நாங்கள் இவ்வாறு மக்களுடன் கலந்தாலோசிக்கிறோம். நாங்கள் அரசியலை உண்மையான மக்கள் சேவையாக மாற்றியமைப்போம். அறிவாற்றல் மிக்க மனிதர்களை நிர்மாணிக்க வேண்டியுள்ளது. பொருளாதாரத்தை திட்டமிட்ட உற்பத்தி துரையாக மாற்றி அனைவருக்கும் அதன் பலன்களை நியாயமான முறையில் பகிர்ந்து செல்லும் வகையில் கட்டியெழுப்புவோம். எனவே நாம் இந்நாட்டில் நியாயமான, சமத்துவமான ஓர் சமுதாயத்தை நிலைநாட்டுவதற்கு திட்டமிட்டுள்ளோம். எனவே இதற்காக அரசாங்கத்துக்கும், தனியார் துறைக்கும் தனிப்பட்ட ரீதியிலும் பாரிய பொறுப்புகள் உள்ளது என கூறினார்.

---

# இனவாதத்துக்கு எதிராக
# தேசிய ஒற்றுமையின் கொடியை கைப்பற்றுவோம்!

**ஜே.வி.பி. தலைவர் தோழர் அநுர திசானாயக்கா**

எவ்வித இனவாதத்துக்கும் எமது நாட்டை ஒரு அங்குலத்தில் கூட முன்னோக்கி கொண்டு செல்ல முடியாது எனவும், நாம் அனைவரும் இனவாதத்தை தோற்கடித்து தேசிய ஒற்றுமையின் கொடியை கைப்பற்றி கொள்ள வேண்டும் எனவும் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் தோழர் அநுர திசானாயக்கா வலியுறுத்துகிறார்.

கடந்த 18ம் திகதி ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் சந்தர்ப்பத்திலேயே அவர் இவ்வாறு கூறினார், மேலும் கூறுகையில், இன்று எமது நாட்டில் மீண்டும் இனவாத தீப்பொறிகள் பரவத் தொடங்கியுள்ளது. இந்நிலைமைகளை தான் அண்மையில் அலுத்கமையிலும், பேருவலையிலும் நாம் கண்டோம். தினை விதைத்து எள்ளை எதிர்பார்க்க முடியாது. பயிரிட்டவை தான் அறுவடையாக கிடைக்கும், அண்மைக் காலமாக நாட்டில் பல்வேறு இனவாதங்கள் எழுச்சியுற ஆரம்பித்தது. சிங்கள இனவாதம், தமிழ் இனவாதம், முஸ்லிம் இனவாதம், சிறிது சிறிதாக வளர்ந்து வந்தது. எவ்வித இனவாதத்துக்கும் எமது நாட்டை ஒரு அங்குலத்தில் ஏனும் முன்னோக்கி கொண்டு செல்ல முடியாது. எனவே நாம் அனைவரும் தேசிய ஒற்றுமையின் கொடியை கைப்பற்றிக் கொள்ள வேண்டும்.

நாம் 30 வருட தொடர் யுத்தத்தால் மிகக் கொடூரமான அனுபவங்களை பெற்று கொண்டோம். தேசிய ஒற்றுமையை பாதுகாக்கும் அளவுக்குத் தான் எமது தாய்நாடும், மக்களும் பாதுகாக்கப்படுவார்கள். எனவே நாம் இத்தருணத்தில் கேட்டுக்கொள்வது எச்சந்தர்ப்பத்திலும் அவசரப்படாமல் எவ்வித இனவாதத்துக்கும் இரையாகாமல் மிக நிதானமாக சிந்தித்து தேசிய ஒற்றுமைக்காக நாம் அனைவரும் செயல்பட வேண்டும். இந்நிலையை நிறுத்துவதற்கு பதிலாக இதை இன்னும் மூட்டுவதற்கே அரசு தொடர்ந்தும் செயல்பட்டு வருகின்றது. பெரும்பாலும் அரசாங்கம் தலையிட வேண்டிய பலசந்தர்ப்பங்களை கைவிட்டுள்ளனர். இதன் பலனாகத்தான் நாடு இன்று ஓர் இருண்டு கவலைகரமான இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளது. எனவே நீங்கள் தேசிய ஒற்றுமைக்காக செயல்படுங்கள் எவ்வித இனவாதத்துக்கும் இரையாக வேண்டாம் என மீண்டும் மீண்டும் வலியுறுத்துகிறோம். இந்நிலையை பயன்படுத்தி அரசாங்கமும், அரசாங்கத்தின் பாதுகாப்பில் இருக்கும், அரசாங்கத்தின் பணம், வாகனங்கள் போன்றவற்றால் வளர்ந்து வரும் சிற்சில குழுக்கள், எமது கட்சிக்கும், தனிப்பட்ட ரீதியில் எனக்கும் சேறுபூசும் நடவடிக்கையொன்றை திட்டமிட்டுள்ளனர்.


விசேடமாக இத்தினங்களில் அரசாங்கத்தின் அமைச்சர்கள், பாராளுமன்று உறுப்பினர்கள் மற்றும் அரச ஊடகங்கள் கூறியது, யாரையாவது தாக்கினால் அவர்களையும் தாக்குங்கள் என நான் சொன்னதாக எனக்கு எதிராக ஓர் கருத்தை போஷித்து வருகிறது. நான் அதை முற்றாக நிராகரிக்கிறேன். நான் மட்டுமல்ல மக்கள் விடுதலை முன்னணியின் எவ்வித அங்கத்தவரும் அவ்வாறான கருத்தை வெளியிடவில்லை.



அரசாங்கம் இவ்வாறான சூழலை நிர்மாணித்து, அந்நிலையை தடுப்பதற்கு முயற்சி செய்யாமல் வேறு ஆட்களுக்கு சேறு பூசும் நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பது ஏன்? விசேடமாக எமது நாட்டில் அண்மைக்காலகத்தில் மக்கள் விடுதலை முன்னணி தொர்பாக பெரும் நம்பிக்கையொன்று வளர்ந்து வந்தது. சிங்கள, தமிழ், முஸ்லிம் வேறுபாடின்றி மக்கள் தமது எதிர்காலம் தொடர்பான, நாட்டின் எதிர்காலம் தொடர்பான பொறுப்பை மக்கள் விடுதலை முன்னணி ஏற்றுகொள்ளும் என்ற நம்பிக்கை மக்களிடையே வளர்ந்திருக்கின்றது. இந்த நம்பிக்கைக்கு பங்கம் விளைவிக்கும் சூழ்ச்சிகளில் அரசு ஈடுபட்டு வருகின்றது. எனவே ஒருபோதும் சொல்லாத வார்தைகள் சொன்னதாக அவதூறு விளைவிக்கின்றனர். விசேடமாக எம்மை பற்றி நம்பிக்கை வைத்துள்ள சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களிடம் நாம் கேட்டுக்கொள்வது அவ்வாறான பொய்களுக்கு ஏமாற வேண்டாம் என்றாகும். அது மட்டுமல்ல அரசு இதில் நின்றுவிடாது, அவர்களுக்கு தெரியும் அரசாங்கத்தின் பிரதான எதிரி மக்கள் விடுதலை முன்னணி என்று. அரசாங்கத்தின் மாபெரும் ஊழல், மோசடிகளை பகிரங்கப்படுத்துவதும், அரசின் பொருளாதாரத்தை விமர்சிப்பதும், மக்களுக்கு எதிராக அரசு எடுக்கும் நடவடிக்கைகளுக்கு எதிராக குரலெழுப்புவது மக்கள் விடுதலை முன்னணி மட்டுமேயாகும். எனவே அரசாங்கம் எமக்கு எதிராக சேறுபூசும் முயற்சி எடுத்து வருவதாக எமக்கு தகவல்கள் கிடைத்துள்ளது. அவற்றுக்கு ஏமாற வேண்டாம் என்றும், மக்கள் விடுதலை முன்னணி தொடர்பாக நீங்கள் வைத்திருக்கும் நம்பிக்கைக்கு எந்த வகையிலும் பங்கம் விளைவிக்க மாட்டோம். அந்த நம்பிக்கையை இன்னும் இன்னும் வளர்த்து கொள்ளுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது வேட்பாளரும் பொதுவான எதிர்பார்ப்பும்



உரிய காலத்திற்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவது பற்றி அரசாங்கத்தின் கவனம் திரும்பியிருக்கும் நிலைமையில் ஜனாதிபதி தேர்தலுக்கான பொது வேட்பாளர் பற்றிய கருத்தாடல் செய்யப்பட்டு வருகிறது. நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமை முதலாளித்துவ ஜனநாயகத்தின் சுபாவங்களையும் கொன்றொழிக்கின்ற சர்வாதிகார முறை என்பதால் அதை இல்லாதொழிக்க வேண்டியதன் தேவை அதன் பிறப்பு முதலே தொடங்கியிருக்கிறது. அதனால் நிறைவேற்றதிகாரத்தை இல்லாதொழிப்பதை குறிக்கோளாக கொண்ட பொது வேட்பாளர் ஒருவரை ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்தும் தேவை ஆரம்பம் முதலே நிலவி வந்தது. உண்மையாகவே நிறைவேற்றதிகாரத்தை இல்லாதொழிப்தென்றால் கட்சிசாரா வேட்பாளர் ஒருவர் பற்றிய கருத்தை இந்த சமூகத்தில் 1982ம் ஆண்டு மக்கள் விடுதலை முன்னணியின் ஸ்தாபகர் தோழர் ரோகண விஜேவீரவால் விதைக்கப்பட்ட கருத்தாகும். அத்தோடு நிற்காது கடந்த காலம் முழுவதிலும் ஜனாதிபதித் தேர்தலின்போது மக்கள் விடுதலை முன்னணி இதற்கான முயற்ச்சிகளை மேற்கொண்டு வந்திருக்கிறது. நிறைவேற்றதிகாரத்தை இல்லாதொழிப்பதற்கு வாக்குறுதியளித்த சந்திரிகா அம்மையார் போலவே மகிந்த ராஜபக்ஷவும் அதை உதரித்தள்ளியுள்ளார்.

அடுத்ததாக தற்போது பொது வேட்பாளர் பற்றிய சுலோகமானது அதன் உண்மைத் தன்மையிலிருந்து விலகி ஒவ்வொரு அரசியல் கட்சிகளினதும் குழுக்களினதும் குறுகிய நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டு வருவதை காணமுடிகிறது. இதனால் பொது வேட்பாளர் பற்றிய அரசியல் எண்ணக்கருவை மீண்டும் புதிதாக வாசித்தறிய வேண்டிய தருணம் வந்திருக்கிறது.

மகிந்த ராஜபக்ஷ அவர்கள் 2005ல் ஜனாதிபதி பதவியை பொறுப்பேற்கும் போது தமது முதலாவது பதவிகாலம் முடியும் முன்னர் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவியை ஒழிப்பேன் என்று பகிரங்கமாக உறுதியளித்திருந்தார். ஆனால் உறுதிமொழியை எதுவித வெட்கமுமின்றி மீறிய மகிந்த மீண்டும் 2010ல் மீண்டுமொரு தேர்தலை நடத்தி தனது இரண்டாம் தடவை பதவி காலத்தையும் பதவி வகித்து வருகிறார். அத்தோடு நிற்காத அவர் 2010ம் ஆண்டில் 18வது அரசியல் சாசனத்தை நிறைவேற்றியதன் மூலம் ஜனாதிபதி பதவிக்கான இருதடவை கால எல்லையை மாற்றிக் கொண்டு இப்போது மூன்றாவது தடவையாகவும் ஜனாதிபதியாக கனவு கண்டுக் கொண்டிருக்கிறார். அதனால் தற்போது நடைபெற வேண்டியதெல்லாம் ஜனாதிபதித் தேர்தலுக்கு தயாராவதல்ல ஜனாதிபதி முறையை அகற்றும்படி அரசாங்கத்தை வற்புறுத்துவதேயாகும். அடுத்த ஜனாதிபதித் தேர்தலை நடத்தப்போவது மக்கள் வாக்களிக்காத, இலஞ்சம் கொடுத்து பெற்றுக்கொண்ட பாராளுமன்றத்தின் மூன்றில் இரண்டு பலத்தால் நிறைவேற்றிக் கொண்ட 18வது திருத்ததிற்கு ஏற்ப அந்த சம்பிரதாய விரோத செயலை எதிர்க்க வேண்டும். மூன்றாவது தடவையாகவும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட மகிந்த ராஜபக்ஷவுக்கு உரிமையில்லை. அதனால் அதை எதிர்க்க வேண்டும். அவற்றை பொருட்படுத்தாது ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படுமானால், இதன்போது மகிந்த ராஜபக்ஷ ஆட்சியை உண்மையாகவே முடிவுக்கு கொண்டுவரக் கூடிய மக்கள் சக்தியை கட்டியெழுப்பி அதன் மூலமாக ஜனாதிபதித் தேர்தலுக்கு முகம் கொடுத்தாக வேண்டும். ஆனால் இப்போது தோன்றியிருக்கும் கருத்தாடல் அதை நோக்கியதாக அமையவில்லை.

முதலாளித்துவ வர்க்கத்திடமிருந்து தமது உரிமைகளை வென்றெடுப்பதற்காக கடந்த காலத்தில் தொழிலாளர் வர்க்கத்தால் கட்டியெழுப்பிய தொழிற்சங்கள் பிற்காலத்தில் முதலாளித்துவ வர்க்கத்தால் தமது நோக்கங்களுக்காக பயன்படுத்தியதைப் போன்று முதலாளித்துவ வர்க்கத்திற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட தொழிலாளர் போராட்டத்தை நினைவு கூறுவதற்காக ஆரம்பித்த மே தினம் பின்னர் முதலாளித்துவ வர்க்கம் தமது கரங்களில் எடுத்ததை போன்றே வர்க்க கண்ணோட்டத்தில் முதலாளித்துவத்தை தோற்கடிப்பதற்காக நிறைவேற்று அதிகாரத்தை ஒழிப்பதற்காக தயாரிக்கப்பட்ட 'பொது வேட்பாளர்' சுலோகம் அதற்கு உரிமையில்லாதவர்கள் தமது அதிகார நோக்கங்களுக்காக கையில் எடுத்துள்ளனர். ஒவ்வோரு கட்சிகளினதும் ஒவ்வொரு வர்க்கங்களுக்கும் மறைமுகமாக தொடர்புடைய குழுக்கள் அந்த கட்சிகளின் நபர்களுக்கு 'பொது வேட்பாளர்" லேபலை ஒட்டி மக்கள் மத்தியில் கொண்டுச் செல்வதற்கு முயற்சித்து வருகின்றனர். அதில் பாரிய சிக்கலான விடயம் என்னவெனில் சில தரப்பினருக்கு உள்ள அவர்களின் தொடர்புளை மறைத்து மக்களை ஏமாற்றுவதற்காக கட்சிசாரா பொது வேட்பளரைப் பற்றி பேசுவதாகும். அதன்படி இப்போது தோன்றியுள்ள நிலமையின் கீழ் கட்சிசாரா பொது வேட்பாளர் என்பது குறிப்பிட்ட அமைப்புகளின் உண்மையான கருத்தை மறைக்கும் தந்திரோபாயமாக அமைந்திருக்கிறது. பொது வேட்பாளர் எனும் சுலோகத்தை மேலோட்டமாக அல்ல ஆழமாக ஆராய வேண்டியிருப்பது அதனாலாகும்.

எவ்வாறாயினும் இப்பொழுது பொது வேட்பாளர் பற்றிய கருத்தாடலை ஐ.தே.க.வினால் சிதைக்கப்பட்டிருக்கிறது. வங்குரோத்தடைந்த அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்கு பொது வேட்பாளர் எனும் லேபலை ஒட்டுவதற்குப் பதிலாக மக்களுக்கு பொறுப்பு கூறக் கூடிய நம்பிக்கையான உண்மையான பொது வேட்பாளர் ஒருவரை முன்வைப்பதற்கு இருந்த வாய்ப்பினை ஐ.தே.க இல்லாதொழித்துள்ளது. அது எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தனியாக போட்டியிடப் போவதாக கூறுவதன் மூலமாகும். இது ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக அச்சத்திலும் சந்தேகத்துடனும் இருந்த மகிந்த ராஜபக்ஷாவுக்கு "ஆறுதல்" அளிக்கும் விடயமாகும். எவ்வாறாயினும் ஐ.தே.க இப்போது தயாராகி வருவது எதற்கு? அது தமது கட்சியில் தெரிவு செய்யப்படும் வேட்பாளரை (ரணில் விக்கிரமசிங்க) பொது வேட்பாளராக மாற்றுவதற்காகும். கடந்த காலம் முழுவதிலும் பொது எதிர் கட்சியை உருவாக்குவதற்காக பெரும் முயற்ச்சிகளை மேற்கொண்டு அது தோல்வியடைந்துள்ள நிலையில் ஜனாதிபதித் தேர்தல் மூலமாக அதை மீண்டும் நிறைவேற்றுவதாக எண்ணியிருக்கலாம். ஆனால் ஐ.தே.க வேட்பாளர் பொது வேட்பாளாராக முடியாது. நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை உருவாக்கியது ஐ.தே.கவாகும் அதேபோன்று இப்போது கொண்டுச் செல்லப்படும் கொள்ளைகார பொருளாதார கொள்கையை ஆரம்பித்ததும் ஐ.தே.கவாகும். அதனால் ஜனநாயகம் உள்ளிட்ட நாட்டில் இருக்கும் பிரச்சினைகளுக்கு ஐ.தே.க தீர்வாக அமைய போவதில்லை. அது மட்டுமல்ல ஐ.தே.கவில் சில காலமாக உட்கட்சி பூசலும் அதிகாரப் போட்டியும் நிலவிவருகிறது. அது ரணிலுக்கும் சஜித்துக்கும் இடையிலாகும். ரணில் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவாரானால் சஜித் பிரிவினரின் நிபந்தனை என்ன? ரணில் ஜனாதிபதி ஆவார் என்றால் சஜித்திற்கு பிரதமர் பதவி வழங்கியாக வேண்டும். இதிலிருந்து தெரிவதென்ன? நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிக்க ஐ.தே.க தயாரில்லை என்பதல்லவா? ஏனென்றால் சஜித்துக்கு பிரதமர் பதவி வழங்க வேண்டுமென்றால் ரணில் தொடர்ந்தும் ஜனாதிபதியாக இருந்தாக வேண்டும். அதன்போது ஜனாதிபதி முறை ஒழிப்பு பொய்யான விடயமாகும். இவ்வாறு தர்க்க ரீதியாக சிந்திக்க முடியாத ஐ.தே.க தலைவர்கள் நிறைவேற்று அதிகாரத்தை இல்லாதொழிப்பதென்பது நகைப்பிற்குரிய விடயாகும். அதனால் ரணில் விக்கிரமசிங்க பொது வேட்பாளர் இல்லையென்பது போலவே நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிப்பதற்குரிய நபரும் அல்ல.

இவ்வாறான நிலையில் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் நடக்கப் போவது கூட்டமைப்பின் வேட்பாளராக மகிந்த ராஜபக்ஷவும் ஐ.தே.க வின் வேட்பாளராக ரணில் விக்கிரமசிங்கவும் முன்வருவதல் மட்டுமேயாகும். இவர்கள் இருவரும் முதலாளித்துவ முகாமின் வேட்பாளர்களாவர். அந்த முகாமுடன் இணைந்திருக்கும் சிறு சிறு கும்பல்கள் இவர்களோடு இணைவர். பொது மக்களின் தேவையை முன்னிலைபடுத்திய மாற்று வேட்பாளருக்கான அகநிலை காரணி தோன்றுவது இவ்விடத்திலாகும். அவ் இடைவெளியை நிரப்புவதற்காக செயற்படுவது மக்கள் சார்பான சக்திகளின் பொறுப்பாக இருப்பதுடன் அது அச் சக்திகளுக்கு கிடைத்திருக்கும் அரியதொரு வாய்ப்பாகும்.

நெருக்கடிக்கு உள்ளான பின்தங்கிய இலங்கை முதலாளித்துவ முறை இனியும் கொண்டுச் செல்வதற்காக சர்வாதிகார தனி ஆட்சி சாதகமாகவுள்ளது. முதலாளித்துவ ஜனநாயகத்துடனான இந்த பலவீனமான முதலாளித்தை தொடர்ந்தும் கொண்டுச் செல்ல முடியாது. மக்களை ஒடுக்கி முதலாளித்துவ வர்க்கத்தை நலிவடையச் செய்து ஒற்றுமையின்மையை மறைத்து ஆட்சிபுரிந்து தற்போதயை முதலாளித்துவத்தை கொண்டுச் செல்வது நிறைவேற்று அதிகாரத்தினாலாகும். (தொடர்ச்சி 07)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் இந்த நாட்டில் இரத்தக் களரிக்கு இடமளிக்க கூடாது




*மட்டக்களப்பு மாவட்ட அலுவலக திறப்பு விழாவும் மக்கள் சந்திப்பும் ஜூன் 25, மட்டக்களப்பு, காத்தன்குடி பாலமுனையில் இடம்பெற்றது அங்கு ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் தோழர் ரில்வின் சில்வா ஆற்றிய உரையின் ஒரு பகுதி*

இன்று விஷேடமான நாளாகும், ஏனென்றால் நாம் இன்று மட்டக்களப்பு மாவட்டத்தில் கட்சியின் அலுவலகத்தை திறந்து வைக்கின்றோம். இப்போது இது தீர்மானகரமான சந்தர்ப்பமாகும். இன்றைக்கு சில தினங்களுக்கு முன்னர் அளுத்கமை தர்கா நகரில் இனக்கலவரம் ஏற்பட்டது. இப்போது அது தணிந்திருந்தாலும். மீண்டும் பரவுவதற்கான வாய்ப்பிருக்கிறது. இனவாதம் பொரும்பான்மையான சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களின் தேவையல்ல. ஆனால் சிறு கும்பலொன்று இனக்கலவரத்தை ஏற்படுத்த முயற்சித்து வருகிறது. மக்களிடையே குழப்பத்தை ஏற்படுத்த ஒற்றுமையை சீரழிக்க முயன்று வரும் வேளையில் தான் நாம் மட்டக்களப்பிற்கு வந்திருக்கின்றோம். அதாவது தேசிய ஒற்றுமைக்காக கரம்கோர்த்துக் கொள்வோமென்று கேட்பதற்கே நாம் இங்கு வந்திருக்கின்றோம். இனவாதத்தை தடுத்து நிறுத்த வேண்டும். இனவாதத்தால் எமக்கு ஒரு பயனும் ஏற்பட போவதில்லை. இனவாதத்தின் காரணமாக கறுப்பு ஜூலை உருவானது. பின்னர் அது முப்பது வருட யுத்தமாக மாற்றமடைந்தது. அந்த யுதத்தத்தில் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களின் உயிர்கள் உடைமைகள் அழிவுற்றது. இப்போது அந்த யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்து தேசிய ஒற்றுமையை கட்டியெழுப்ப வேண்டிய தருணத்தில் மீண்டும் இனக்கலவரம் தோன்றுமானால் இது யாருக்கும் நல்லதல்ல. இனவாதம் அடிப்படைவாதம் எந்தப் பக்கத்திலிருந்து வந்தாலும் அது நன்மைகளை பெற்றுக் கொடுக்கப் போவதில்லை. அதனால் சிங்கள, தமிழர், முஸ்லிம் நாம் ஒன்றிணைந்து எம் முன்னால் இருக்கின்ற பாரிய பிரச்சினைக்குத் தீர்வினை தேட வேண்டும்.

இன்று நாட்டு மக்கள் பெரும் கஷ்டத்தின் மத்தியிலேயே வாழ்ந்து வாழ்கின்றனர். இந்த பிரதேசத்தை எடுத்துக் கொண்டால் கடற்றொழில் ஈடுபடுவோர் இருக்கின்றனர். சிறு தொழில்களை செய்து வாழ்வோர் இருக்கின்றனர். கிடைக்கின்ற வருமானத்தில் வாழ முடியாது. அரசாங்கம் பொருட்களின் விலைகளை உயர்த்துகிறது. பிள்ளைகளுக்கு கற்பதற்கு சிறந்த பாடசாலைகள் இல்லை. வைத்தியசாலை வசதிகள் இல்லை. தொழில் இல்லை. பல சிரமங்களின் மத்தியில் நாம் வாழ்ந்து வருகின்றோம். எல்லா இடங்களிலும் இதே பிரச்சினையை மக்கள் சந்தித்து வருகின்றனர். அதில் சிங்கள, தமிழ் முஸ்லிம் மக்கள் அனைவரும் ஒடுக்கு முறைக்கு உள்ளாகி வருகின்றனர். அதனால் எமக்குத் தேவைப்படுவது நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து பிரச்சினையின் தீர்விற்கான விடிவினைத் தேடும் அரசியலே தவிர இனங்களுக்கடையே கலவரங்களை ஏற்படுத்தும் அரசியல் அல்ல. ஜே.வி.பி மிகவும் பொறுப்புடன் கூறுகிறது இந்த இனவாத கலவரங்களுக்கு பின்னால் அரசாங்கமே இருக்கிறது.

நாம் எப்போதும் ஒரு பேச்சினையே பேசுவோம். நாம் தெற்கிற்கு சென்று ஒரு கதையும், வடக்கிற்கு சென்று இன்னொரு கதையும், கிழக்கிற்கு வந்து வேறொரு கதையையும் சொல்லும் கட்சியல்ல. நாம் சொல்லுவது உண்மையென்பதால் அதை சொல்லுவதற்கு நாம் அஞ்ச மாட்டோம். அரசாங்கம் சில காலமாகவே பல்வேறு சேனாக்களை ஊக்குவித்த செயற்பாடுகளின் ஒரு கட்டமே தர்கா நகரில் ஏற்பட்ட கலவரம் தர்கா நகரின் ஒற்றுமையை சீர்குழைத்தவர்கள் வெளியிலிருந்து வந்த காடையர்களாகும். அரசாங்கம் தான் அந்த குழுக்களுக்கு அதிகாரத்தை கொடுத்து பராமரித்தது. சட்டத்தை கையில் எடுத்தவர்களின் முன்னால் பொலிசார் கைகளை கட்டிக்கொண்டு பார்த்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அதனால் இந்த கலவரங்களுக்கான பொறுப்பினை அரசாங்மே ஏற்க வேண்டும். அரசாங்கம் இனவாதத் தீயை மூட்டுகின்ற போது தேசிய ஒற்றுமைக்காக முதன் முதலில் செயற்பட்டவர்கள் மக்கள் விடுதலை முன்னணியாகும். ஜனாதிபதி, ஹக்கீம், வேறு அமைச்சர்கள் அங்கு செல்ல முன்னரே அந்த பிரதேசத்திற்கு சென்று அங்குள்ள மக்களை முதல் முதலில் சந்தித்தவர்கள் மக்கள் விடுதலை முன்னணியாகும். அங்கு நாம் அனைவருடனும் கதைத்து இந்த இன வன்முறையை நிறுத்த வேண்டுமென கேட்டது நாங்களே ஆகும். 1948ல் இருந்து நாட்டை ஆண்ட அரசாங்கங்கள் தமக்கு மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க இயலாதபோது, ஆட்சி நடத்துவதில் சிரமம் ஏற்படும்போது அதை மூடிமறைக்க இனவாதத்தையே பயன்படுத்தினர். அவர்களுக்கு இனவாதத்தால் பல நன்மைகள் உள்ளது. ஒன்று உண்மையான பிரச்சினைகளை மூடிமறைப்பதாகும். சுகாதார பாடநெறியை துண்டிப்பதற்கு எதிராக, ஓய்வூதிய பணிக்கொடை துண்டிப்பிற்கு எதிராக மக்களின் போராட்டம் எழுந்தது. அவை வெற்றியும் பெற்றது. அதன் காரணமாகவே அரசாங்கம் இனக் கலவரத்தை மூட்டிவிட்டது. ராஜபக்ஷவினை சூழவுள்ள சிலரைத் தவிர மற்ற அனைவருக்கும் இந்த அரசாங்கத்தின் மீது வெறுப்பு அதிகரித்துள்ளது. சிங்கள, தமிழ் முஸ்லிம்களாக பிரித்து மத ரீதியாக பிரித்து அதில் குளிர்காயப் பார்க்கிறார்கள். இந்த அரசாங்கம் இனவாதத்தை தூண்டுகின்றபோது அரசாங்கத்தில் முஸ்லிம் இனவாதத்தின் மூலமாக வாக்குகளை எடுப்பதற்கு ஹக்கீம் இருக்கிறார். சிங்கள இனவாதத்தை கக்கி வரும் சம்பிக்க ரணவக்க, விமல் வீரவன்சவும் இருக்கிறார். கருணா அம்மான் இருக்கிறார், டக்ளஸ் தேவானந்தா இருக்கிறார், தொண்டமான் இருக்கிறார். இவர்கள் அனைவரும் ஒன்றாக அரசாங்க அமைச்சரவையில் இருக்கின்றனர். மக்களோ தமக்கிடையே முரண்பட்டு கொள்கின்றனர், தீவைத்துக் கொள்கின்றனர். சிங்கள தலைவர்கள், முஸ்லிம் தலைவர்கள், தமிழ் தலைவர்கள் மக்களின் பிரச்சினைகளை பாவித்து வாக்குகளை பெற்று அரசாங்கத்திற்கு விற்று அமைச்சு சொகுசுகளையும் சலுகைகளையும் அனுபவித்து வருகின்றனர். வெளியே இனவாதத்தை தூண்டிவிட்டு உள்ளே ஒன்றாக இருக்கின்றனர். அவர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து எம்மீது வரிகளை சுமத்துகின்றனர்.

அதனால் நாம் கட்சிகளாக பிரிந்து அரசியல் செய்யவேண்டியதல்ல. சிங்கள, தமிழ், முஸ்லிமாக பிரிந்து அரசியல் செய்ய முடியாது. எம்மிடையே இருக்கும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு தேசிய ஒற்றுமையை கட்டியெழுப்புவதற்கு சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களின் அரசாங்கமொன்றை உருவாக்குவதற்கு அணிதிரண்டாக வேண்டும். அவ்வாறு ஒன்றாக சேரக்கூடிய ஒரே கட்சி மக்கள் விடுதலை முன்னணி மட்டுமேயாகும். குறுகிய அரசியலை ஒதுக்கிவிட்டு ஒன்றுசேர வேண்டும். மக்கள் விடுதலை முன்னணி சிங்கள, தமிழ், முஸ்லிம், பர்கர், மலே ஒடுக்கப்பட்ட மக்களின் கட்சியாகும். புதிய சமுதாயத்தை உருவாக்கக்கூடிய ஒரே கட்சியுமாகும். தேசிய ஒற்றுமையை கட்டியெழுப்பக் கூடிய ஒரு கட்சியாகும்.

வெள்ளைக்காரன் நாட்டை விட்டுச் சென்று 66 வருடங்களாகிறது. இன்று நாட்டில் என்ன மிஞ்சியிருக்கிறது? இதுநாள் வரையில் சிங்கள அரசியல்வாதிகள் சிங்கள மக்களுடன் அரசியல் செய்தனர். முஸ்லிம் அரசியல்வாதிகள் முஸ்லிம் மக்களோடு அரசியல் செய்தனர். தமிழ் அரசியல்வாதிகள் தமிழர்களுடன் அரசியல் செய்தனர். ஆனால் நமக்கு வறுமை மட்டுமே மிஞ்சியிருக்கிறது. கொலை, கொள்ளை, குற்றச்செயல்கள் அதிகரித்துள்ளன. ஜனநாயகம் குழிதோண்டிப் புதைக்கப்பட்டுள்ளது. இவை அனைத்திலும் கஷ்டப்படுவது மக்களேயாகும். ஸ்ரீலசுகாவும், ஐதேகாவும் எமது நாட்டை ஆட்சிசெய்த இரண்டு கட்சிகளாகும். இவர்கள் எமது நாட்டிற்கு எனன் செய்திருக்கிறார்கள்? முஸ்லிம் காங்கிரஸ் ஸ்ரீ.ல.சு கட்சியுடனும், ஐ.தே. கட்சியுடனும் இணைந்திருந்தனர். தொண்டமான்கள் ஸ்ரீ.ல.சு கட்சியிலும் ஐ.தே. கட்சியிலும் அமைச்சுப் பதவிகளை வகித்தனர். அவர்களுக்கு

> நாம் கட்சிகளாக பிரிந்து அரசியல் செய்யவேண்டியதல்ல. சிங்கள, தமிழ், முஸ்லிமாக பிரிந்து அரசியல் செய்ய முடியாது. எம்மிடையே இருக்கும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு தேசிய ஒற்றுமையை கட்டியெழுப்புவதற்கு சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களின் அரசாங்கமொன்றை உருவாக்குவதற்கு அணிதிரண்டாக வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைச்சுப் பதவி கிடைத்தது. மக்களுக்கு என்ன கிடைத்தது?


இப்போது 'அரசாங்கம் அபிவிருத்தியைப் பற்றிப் பேசுகிறது. தொலைகாட்சிகளில் அபிவிருத்தி புரண்டோடுகிறது. ஆனால் மக்களுக்கு எதுமே கிடைக்கவில்லை. வறுமையில் வாடும் மக்கள் அதிகமாக இருக்கும் மாகாணமாக ஊவா மகாணம் தங்கப் பதக்கத்தை வென்றிருக்கிறது. வறுமையில் இரண்டாம் இடம் வெள்ளி பதக்கம் கிழக்கு, மாகாணத்திற்காகும். வறுமையில் மூன்றாம் இடம் வெண்கலப் பதக்கம் வட மகாணத்திற்கு கிடைத்திருக்கிறது. கிழக்கிற்கு கிழக்கின் உதயம், வடக்கிற்கு வடக்கின் வசந்தம் என அழகான பெயர் சூட்டப்பட்டுள்ளது. அதனால் இந்த 66 வருட அரசியலை மாற்றுவதா இல்லையா? தலைவர்களை மாற்றிய போதிலும் நமது பிரச்சினைகள் தீரவில்லை. இன்று நாட்டிற்கு உற்பத்தி பொருளாதாரம் கிடையாது. கடற்தொழிலுக்கு, விவசாயத்திற்கு, வியாபாரத்திற்கு இந்த அரசாங்கம் உதவி செய்வதில்லை. இந்த நாடு கடன் வாங்கி சாப்பிடும் நாடாக மாறியிருக்கிறது. நாம் அனைவரும் 325.000 ரூபாய் கடன்காரர்கள். அது மட்டுமல்ல வீதிக்கு இறங்கினால் பொலிசாரால் அபராதம். கடைக்குப் போனால் வரி அறவிடப்படுகிறது. நாம் உண்ணுகின்ற, உடுத்துகின்ற அனைத்திற்கும் அரசாங்கம் வரி அறவிடுகிறது. கொத்தமல்லிக்கு, சீனி, பருப்பு, பால் மா பெக்கட்டுக்கு வரி அறவிட்டு தேடிய பணத்தில் அரசாங்கம் மக்களுக்கு எதையாவது செய்ததா? கல்விக்கு, சுகாதாரத்திற்கு, விவசாயத்திற்கு, மீனவர்களுக்கு மனியம் வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதா? இல்லை.

அந்தப் பணத்தை வீணாக்குகிறது. அமைச்சரவை நூறைக் கடந்துள்ளது. 127 கேடி மக்கள் இருக்கும் இந்தியாவில் 45 அமைச்சர்களாகும். ஒரு அமைச்சர் போகும்போது ஐந்து வாகனங்கள் ஓடுகிறது. நாட்டு மக்கள் துன்பப் படும்போது ஜனாதிபதி எவ்வளவு பணம் செலவழிக்கிறார்? ஜனாதிபதியின் வாகன குழமத்தின் பெறுதி பல கோடி ரூபாய்களாகும். அமைச்சரவை பல இலட்சங்களை செலவழிக்கிறது. அந்த அநீதியான அரசாங்கத்தை தமிழ், முஸ்லிம் தலைவர்கள் பாதுகாக்கின்றனர். அவர்கள் மக்களுக்கு சார்பாக செயற்பட வில்லை. நாடு தீ பிடித்து எரிகிறது. மக்கள் பாரிய கஷ்டங்களை அனுபவிக்கின்றனர். ஜனாதிபதியின் பிள்ளைகள் கார் ரேஸ் ஓடுகின்றனர். பெரிதாக சிங்கள பௌத்தம் என்று கூறுகின்றனர். ஆனால் பௌத்தமத பீடாதிபதிகளின் கோரிக்கையை நிராகரித்துள்ளனர். சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களை ஏமாற்றும் அரசாங்கம்.

இந்த அரசியல் கலாசாரத்தை மாற்றியமைக்க வேண்டும். அரசாங்கத்தின் அரசியலை தோற்கடித்து சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் ஒன்றாக இருக்க கூடிய, சகலரனிதும் எரியும் பிரச்சினைகளுக்கு தீர்வினை பெறக் கூடிய, மக்கள் நலன் ஆட்சியை உருவாக்க வேண்டும். அதற்காக பெரும் மக்கள் சக்தியை கட்டியெழுப்ப வேண்டும். அதற்கான தகைமை மக்கள் விடுதலை முன்னணியிடமே உள்ளது. நாங்கள் இந்த நாட்டில் ஆட்சி செயய்வில்லை. ஆனால் நிருபித்திருக்கின்றோம் மக்களின் உரிமைகளுக்காக போராடும் ஒரே கட்சி மக்கள் விடுதலை முன்னணியென்று. சிலா் பொய்யான கருத்துக்களை விதைத்து வருகின்றனர். மக்கள் விடுதலை முன்னணியின் ஆட்சியில் மத வழிபாடுகள் தடைசெய்யபடுமென்று, மதம் என்பது மக்கள் மனங்களில் இருக்கும் ஒன்றாகும். அதனால் நாங்கள் கூறுகின்றோம் எங்களது ஆட்சியின் அவர் அவர் விரும்புகின்ற மதத்தை வழிபடுவதற்கான உரிமையை பெற்றுக் கொடுப்போம் என உறுதியளிக்கின்றோம். எவரும் மதத்தின் காரணமாக கொண்டு ஒடுக்குமுறைக்கு உள்ளாக்கப்படக் கூடாது. நமது நாடு மிகவும் அழகிய நாடாகும். அதேபோன்று நமது நாட்டின் கலாசாரமும் அழகானது. சிங்கள, தமிழ், முஸ்லிம் பன்முகத்தன்மை எவ்வளவு அழகானது? அதை அங்கிகரிக்கும் கட்சி எமது கட்சியாகும். இப்போது அரசாங்கத்தின் கொள்கை வியாபார நிலையங்களை தீ வைத்து கொளுத்துவதாகும். ஆனால் மவிமுவின் கொள்கை வியாபாரத்திற்கு உதவிசெய்து உற்பத்தியை பெருக்கி நாட்டைக் கட்டியெழுப்புவதேயாகும். அதனால் மக்கள் விடுதலை முன்னணிக்கு எதிராக அள்ளி வீசப்படும் அவதூறுகளுக்கு ஏமாறாதீர்கள்.

கடந்த சுனாமி அனர்த்ததின்போது நாட்டில் அரசாங்கம் இருக்கவில்லை. தெற்கிற்கு, கிழக்கிற்கு சென்று மக்களுக்காக உதவி செய்தோர் ஜே.வி.பியாகும். நாம் எப்போதும் தொழிலாளார், விவசாயிகள், மீனவர்களின் உரிமைகளுக்காக போராடிய போராடிவருகின்ற கட்சியாகும். எம்மிடம் மதவாதம், இனவாதம் இருக்கவில்லை. தேசிய ஒற்றுமைக்காக அணிசேரவேண்டிய ஒரே கட்சி மக்கள் விடுதலை முன்னணி மட்டுமேயாகும். இனவாமதமிருக்கும் எந்த இடத்திலும் தேசிய ஒற்றுமைக்காக குரல் கொடுக்க கூடிய ஒரே கட்சி மக்கள் விடுதலை முன்னணியாகும். மக்களுக்கு நல்ல வருமானத்தை தரக்கூடிய, இனவாதம், போதைபொருள், குற்றச்செயல்கள், களவு பொய் இல்லாத, நல்லதோரு நாட்டை நமது பிள்ளைகளுக்காக கட்டியெழுப்பியாக வேண்டும். எவரும் சந்தோசமாக இருக்கும் நாட்டை கட்யெழுப்ப வேண்டாமா? இந்நாட்டில் இனியும் இனக்கலவரம் ஏற்படுவதற்கு இடமளிக்க கூடாது. மீண்டும் இரத்தம் சிந்த இடமளிக்க முடியாது. இனவாதத்தை இன்னுமொரு இனவாதத்தால் தோற்கடிக்க முடியாது. இனவாதத்தை தேசிய ஒற்றுமையால் மட்டுமே தோற்கடிக்க முடியும். அதனால் தேசிய ஒற்றுமையின் கொடியை கையில் எடுக்கும்படி தமிழ் சிங்கள, முஸ்லிம் மக்கள் அனைவருக்கும் நாம் அழைப்பு விடுக்கின்றோம்.

## 5ம் பக்கம் தொடர்சி பொது வேட்பாளரும்



அதனால் முதலாளித்துவ முறையை முன்னெடுத்துச் செல்லும் எந்தவொரு முதலாளித்துவ தலைவரும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிப்தென்பது எவரும் நம்புவதற்குரிய விடயமல்ல.

மறுபுறத்தில் முதலாளித்துவத்தில் இலங்கை வாழ் மக்கள் முகம்கொடுத்திருக்கும் பாரிய சமூக பொருளாதார அரசியல் மற்றும் கலாசார பிரச்சினைகளை பார்க்கும்போது நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிப்பது மற்றும் முதலாளித்துவ ஜனநாயக உரிமைகளை வென்றெடுப்பதற்கு மட்டும் வரையறுக்க முடியாதுள்ளது. ஜனாநாயகத்தை வெல்வது போன்றே தேசிய ஒற்றுமையை கட்டியெழுப்புவதும், பொருளாதார பிரச்சினைகளுக்கு தீர்வினை தேடிக்கொள்வதும் அத்தியாவசியமாக இருக்கிறது. அதனால் இவ்வேளையிலிருந்து அனைத்து தேர்தல்களிலும் சகல பிரச்சினைகளுக்கும் தீர்வைத் தரக்கூடிய அரசியல் பாதையை அமைப்பது ஒடுக்கப்பட்ட மக்களின் தலையாய கடமையாகும். அது ஜனாதிபதித் தேர்தலுக்கும் பொருந்தும்.

அதேபோன்று ஜனாதிபதி முறையை ஒழிக்கும் விடயத்தை கருத்தில் கொள்ளும்போது நம்பிக்கை இழக்கும் ஒன்றாக இருக்கிறது. சொல்லுவதை நிறைவேற்றுகின்ற வேட்பாளர் தொடர்பான பிரச்சினை மிகவும் முக்கியமானதாகும். தற்போதுள்ள அனுபவங்களின்படி முதலாளித்துவ வர்க்க பிரதிநிதிகள் சொல்வதை செய்பவர்கள் அல்ல. அவர்களை நம்ப முடியாது. அதனால் நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிப்பதற்கான பணியை உண்மையாகவே நிறைவேற்றுவாரென்று நம்பக்கூடிய வேட்பாளரின் தேவை மேலெழுந்திருக்கிறது. தனிப்பட்ட நபர்களை நம்ப முடியாதிருப்பது இதன் முக்கியத்துவத்தை கருதியாகும். அவவ்ாறன நிலையில் அந்நபர் யாராய் இருந்தாலும் மக்கள் சக்திகளுக்கு பொறுப்பு கூறக்கூடிய மக்கள் சக்திகளை பிரதிநிதித்துவம் செய்யும் நபராக வேண்டும். கட்சிசாரா தனிநபர் பாத்திரம் பற்றிய பேச்சுக்கள் இனியும் செல்லுபடியாகாத நிலை இவ்வாறான சூழ்நிலையிலேயே தோன்றுகிறது. சுருக்கமாக கூறுவதென்றால் அரசியலில் ஏற்பட்டுள்ள மாற்றத்திற்கு ஏற்ப பொது வேட்பாளர் எனும் எண்ணக்கருவின் உள்ளடக்கமும் மாற வேண்டியிருக்கிறது. பொது வேட்பாளர் எனும் எண்ணக் கரு பிற்போக்குவாதிகளின் சுலோகமாக மாறாதிருப்பதிற்கும், அதை அவர்களுக்கு கொள்ளையிட இடமளிக்காதிருக்க வேண்டுமென்றால் புதிய அரசியல் நிலமையின்படி பொது வேட்பாளர் சுலோகத்திற்கு புதிய கருத்தியலை கற்பித்தாக வேண்டும்.


இதிலிருந்து கூறுவதாவது பொது வேட்பாளர் வேண்டாம் என்பதல்ல. அது தேவையான ஒன்றாகும். ஆனால் அந்த பொது வேட்பாளர் என்பது முதலாளித்துவ கட்சிகளினதும் பல்வேறு குழுக்களினதும் தேவையை பூர்த்திசெய்கின்றவை அல்ல. பொது மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதாக அமைய வேண்டும். இப்போது உண்மையாகவே பொது வேட்பாளராக ஆக முடிவது பொது சன அபிப்பிராயத்தை பிரதிநிதித்துவம் செய்கின்றதும் அதை செய்யும் ஆற்றல் உள்ள அரசியல் சக்தியொன்று, மக்கள் இயக்கமொன்றை பிரதிநிதித்துவம் செய்யும் வேட்பாளருக்கு மட்டுமேயாகும். நம்பிக்கை வைக்கக்கூடிய வேட்பாளருக்கும் மட்டுமேயாகும். அதனால் இப்போது என்ன நடந்தாக வேண்டும்? தனிப்பட்ட நபர்களோ அல்லது முதலாளித்துவ தலைவர்களை பொது வேட்பாளராக்க மேற்கொள்ளும் முயற்சிகளை தோற்கடித்து மக்கள் பொதுத் தேவைகளை பிரதிநிதித்துவம் செய்கின்ற அதை நிறைவேற்றக் கூடிய பொது வேட்பாளரை நிர்மாணிப்பதேயாகும்.

இது இலகுவான விடயமல்ல. அது அவ்வாறே. ஆனால் அதைத் தவிர வேறு மார்க்கமும் மக்களுக்கு கிடையாது. அதனால் இப்போது உடனடியாக நடந்தேற வேண்டியது இலங்கையும் இந்நாட்டு மக்களும் முகம் கொடுத்திருக்கும் பாரிய சமூக, பொருளாதார, அரசியல் நெருக்கடிகளுக்கு தீர்வினை தேடக் கூடிய சரியான விஞ்ஞானரீதியான கொள்கைத் திட்டத்தை வகுத்து அதைச் சூழ ஒடுக்கப்பட்ட மக்கள் அனைவரையும் திரட்டி பரந்துபட்ட மக்கள் இயக்கத்தை கட்டியெழுப்புவதாகும். அந்த மக்கள் சக்தி பலம் வாய்ந்ததாக பலம்பொருந்திய அரசியல் கட்சி தலைமையின் கீழ் கட்டியெழுப்பியாக வேண்டும். அதன்போது அது மக்கள் விடுதலை முன்னணியிடம் கையளித்தாக வேண்டும். அவ்வாறு கட்டியெழுப்பப்படுகின்ற பலம்வாய்ந்த மக்கள் இயக்கம் ஜனாதிபதித் தேர்தலுக்கு மட்டும் வரையறுக்கப்படாத தற்போதைய ஆட்சியை இல்லாதொழித்து புதிய மக்கள் நலன் பேணுகின்ற ஆட்சியை உருவாக்கும் வரையில் செயற்படக் கூடிய நிலையான ஒன்றாக அமைய வேண்டும். ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளர் அந்த மக்கள் இயக்கத்தை பிரநிதித்துவம் செய்பவரா்க இருக்க வேண்டும். மக்களின் பொதுத் தேவைகளும் பொது எதிர்பார்ப்புகளும் இரண்டல்ல ஒன்றாக கருத முடிவது அப்போதேயாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செஞ்சக்தி

இனவாதத்துக்கு எதிராக துண்டுப்பிரசுங்கள் விநியோகித்தல்



மட்டக்களப்பு மாவட்ட மக்கள் சந்திப்பின் போது




டெங்கு நோயை ஒழிப்பதற்கு நடவடிக்கை எடு!




கட்டாரில் இனவாதத்துக்கு எதிராக துண்டுப்பிரசுங்கள் விநியோகித்தல்



ஜேர்மனியில்எமது நோக்கு சொற்பொழிவு




# அரசாங்கத்தின்இருப்பை பாதுகாப்பதற்கு இனவாதம் அத்தியாவசியமாகும்



வடக்கு, கிழக்கின் யுத்தத்தை காட்டி ஒருகாலத்தில் அரசாங்கங்கள் பொதுமக்கள் முகம்கொடுக்கும் பிரச்சினைகளை மறைத்து வந்ததாகவும் யுத்தம் முடிவடைந்தவுடன் அரசாங்கத்தின் இயலாமை சந்திக்கு வரத் தொடங்கியுள்ளதால் அரசாங்கம் இனவாத குளப்பங்களை நிர்மாணிப்பதற்கு முயற்சியெடுத்து வருவதாக. தெரிவிக்கும் மக்கள் விடுதலை முன்னணியின் பிரதான செயலாளர் தோழர் ரில்வின் சில்வா, அவற்றை நிறுத்திவிடாமல் இனவாத குழுக்கலுக்கு மேலும் வசதிகளை வழங்கி வருவதால் அது உறுதியாகின்றது எனவும், இவ் அனைத்திலும் பொறுப்பை அரசு ஏற்றுகொள்ள வேண்டும் எனவும் கூறுகிறார்.

அலுத்கமவில், பேருவலையில் இடம்பெற்ற இனவாத வன்முறைகளின் பின் கட்சியின் நிலைபாட்டை தெளிபடுத்துவதற்காக மக்கள் விடுதலை முன்னணி தலமையகத்தில் கடந்து 16ம் திகதி நடாத்திய செய்தியாளர் மாநாட்டின் போதே அவர் இக்கருத்துக்களை தெரிவித்தார், அதன்போது அவர் மேலும் கருத்து தெரிவித்தார்,

இச்சம்பவத்தில் ஒவ்வொருத்தருக்கு தமது விடுதலைக்கு பல்வேறு கருத்துக்கள் இருக்கக் கூடும்.

ஆனால் அழிவினால் எந்த பலனும் கிடைக்கமாட்டாது. ஒவ்வொருத்தரை குற்றம் சுமத்திக்கொள்வதற்கு பதிலாக மனிதாபிமானத்தின் பெயரில் மோதலை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறான சந்தர்பங்களில் வரலாற்றிலிருந்து நாம் பாடங்களை கற்றுகொள்ள வேண்டும். பொதுமக்களின் மனோபாவத்தை அடிப்படைவாத குழுக்களினால் அவர்களின் நோக்கங்களை பூர்த்தி செய்து கொள்வதற்காக பயன்படுத்தி கொள்கிறார்கள். மக்களின் உணர்ச்சிகளில் விஷத்தை களக்குகிறார்கள். இது தேசிய ஒற்றுமைக்கு பாதகமானதாகும். இதற்கு முன் நாம் அனைவரும் 30 வருடங்களாக இவ்வாறான ஓர் யுத்தத்துக்கு முகம் கொடுத்து சொல்லொனா துயரங்களை அனுபவித்தோம். பல உயிர்கள், சொத்துக்கள் அழிந்தது. பெருமளவினரின் கை, கால்கள் இழக்கப்பட்டது. யுத்தம் முடிவடைந்து 5வருடங்களில் மீண்டும் ஒரு இனவாத மோதல்கள் ஏற்படுவது மிகவும் பாரதூரமானதாகும்.

அடிப்படைவாதம், இனவாதம் எந்த துறையினரிடமிருந்து வந்தாலும் அது பிழையானதாகும். நாங்கள் இந்த இரு பக்கத்தில் ஒரு பக்கத்தையும் பிரதிநிதித்துவம் செய்வதில்லை நாம் மனிதாபிமானத்தின் பக்கத்தில் தான் இருக்கின்றோம். இந்த வன்முறைகளை மூட்டிவிடுவோர்கள் இவற்றால் பாதிக்கப்படுவதில்லை. இந்த மோதல்களில் சம்பந்தமில்லாத பொதுமக்கள் தான் இவற்றால் அவதிப்படுகிறார்கள். எனவே நாம் அனைவரும் சிங்கள, தமிழ், முஸ்லிம் வேறுபாடின்றி இந்த இனவாத செயல்பாடுகளை எதிர்த்தும், தேசிய ஒற்றுமையை கட்டியெழுப்புவதற்காக அணிதிரளும் படியும் கேட்டுக்கொள்கிறோம் என்றும் கூறினார்.

# அரசாங்கம் பால் மா நிறுவனங்களின் கயிற்றை விலுங்கியுள்ளது



அரசாங்கம் பால்மா இறக்குமதி செய்யும் நிறுவனங்களினால் கொடுக்கப்படும் தரவுகளில் தங்கியிருப்பதாகவும் அவர்கள் கொடுக்கும் கயிறுகளை விழுங்கும் அரசு மக்களுக்கு பொய் சொல்வதாகவும் மக்கள் விடுதலை முன்னணியின் அரசியல் குழு அங்கத்தவர் தோழர் பிமல் ரத்னாயக்கா கடந்த 01ம் திகதி மக்கள் விடுதலை முன்னணியின் தலமை காரியாளயத்தில் நடாத்திய செய்தியாளர் மாநாட்டின் போது தெரிவித்தார்.

உள்நாட்டு பால் உற்பத்தியாளர்களை கட்டியெழுப்புவதற்காக இந்நாட்டுக்கு இறக்குமதி செய்யும் பால்மாவின் விலையை உயர்த்துவதாக கூறினாலும், இந்நாட்டு பால் உற்பத்தியாளர்கள் எமது சந்தைக்கு 10வீத பாலை மட்டுமே உற்பத்தி செய்கின்றனர், மீதி 90வீதத்தை இறக்குமதி செய்வதாகவும் இவ்வாறான நிலையை வைத்து கொண்டு உள்நாட்டு பால் உற்பத்தியாளர்களை பாதுகாக்க முடியாது என்பதை சுட்டிக்காட்டுவதுடன் பால்மாவின் விலையை குறைத்து மக்களுக்கு சலுகை வழங்கும் படி அரசாங்கத்தை வற்புறுத்துகிறார். நீண்டநாள் திட்டமாக திரவப்பால் உற்பத்தியை கூட்ட வேண்டும். அப்போது தான் இந்நாட்டை பால்மா சூழ்ச்சியிலிருந்து பாதுகாக்க முடியும். எமது நாட்டு போஷாக்கு வித்துவான்கள் கூறுவது எமது நாட்டு மக்கள் திரவப் பால் பாவனைசெய்ய வேண்டும் என்றாகும். மக்கள் விடுதலை முன்னணியின் நாமும் அக்கருத்தை ஏற்றுக்கொள்கிறோம். ஆனால் திரவப்பால் உற்பத்தி செய்யாமல், அவ்வாறு உற்பத்தி செய்யும் திரவப்பாலை இலகுவில் கொள்வனவு செய்வதற்கு திட்டமிடாமல் திரவப்பால் பருகுங்கள் என்று சொல்வதால் பிரியோசனமில்லை. திரவப்பால் இல்லாவிட்டாலும் இறக்குமதி செய்யும் பால்மாவை நாட்டில் எந்த மூலை முடுக்கிலும் வாங்கக் கூடிய வகையில் அவற்றை இறக்குமதி செய்யும் நிறுவனங்கள் வினியோகிக்கின்றனர்.

கடந்த 4 மாதகாலத்துக்குல் உலக சந்தையில் ஒருகிலோ மெட்ரிக் தொன் பால்மாவின் விலை 1225 டொலர்களினால் குறைந்துள்ளது. இது பாரிய விலை குறைப்பாகும். எனவே பால்மா இறக்குமதி செய்யும் நிறுவனங்களுக்கும் அரசாங்கத்துக்கும் பால்மா விலையை குறைக்கும் பொறுப்பிருக்கின்றது. அப்படி முடியாவிட்டாலும் அவற்றின் வரியை குறைத்து விடுவதற்கு அரசாங்கத்துக்கு ஓர் பொருப்பிருக்கின்றது என அவர் மேலும் தெரிவித்தார்.

,உஇல 198/19 கொழும்பு 10ல் வசிக்கும் டில்வின் சில்வா அகிய என்னால் இ[illegible] த்து தெல்கந்த நுகேகொடை சரளா அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org